சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99446 16559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 174 | 18.12.2025 | THURSDAY | MARGAZHI : 3 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 174 | 18.12.2025 | வியாழக்கிழமை | மார்கழி : 3 | விலை : ரூ.5/-

3 "பாமகவை கைப்பற்ற அன்புமணி பம்மாத்து" அடுக்கடுக்காக வசைபாடிய ராமதாஸ்!

4 'ஜெயலலிதா இதற்கு ஒப்புக்கொண்டு இருப்பாரா ஊரக வேலை விவகாரத்தில் ஸ்டாலின் கேள்வி

2 2014 முதல் இந்தியா சீனா எல்லையில் ஊடுருவல் இல்லை; மத்திய அரசு தகவல்

# தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சி மன்றக் குழு கூட்டம் : முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது

சென்னை, டிச.18-

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற 3வது தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார்.

கூட்டத்தில் அவர் பேசியதாவது:

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை இப்போது கண்கூடாக பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இப்போதுகூட, 'டிட்வா புயல்' எப்படிப்பட்ட கோர தாண்டவத்தை ஆடியது, அதனால் இலங்கை உள்ளிட்ட நாடுகள் எப்படி பாதிக்கப்பட்டது என்று பார்த்தோம்.

நம்முடைய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வந்த பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால், பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாமல் தமிழ்நாட்டை காப்பாற்றியிருக்கிறோம். எப்போதோ ஒருமுறை, புயல் வெள்ளங்களை எதிர்கொண்ட காலத்தை எல்லாம் நாம் கடந்துவிட்டோம். அதை உணர்ந்துதான் 3 ஆண்டுகளுக்கு முன்பே இந்த பேரிடர்களுக்கேற்ற தடுப்பு மற்றும் தகவமைப்பு உட்கட்டமைப்புகளை தொடங்கிவிட்டோம்.

காலநிலை மாற்ற ஆட்சிமன்றக் குழு

பசுமைத் தமிழ்நாடு இயக்கம்

தமிழ்நாடு ஈரநில இயக்கம்

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்

தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் என்று நாம் கிபீஸ்ணீஸீநீமீஆக நிறைய செய்து கொண்டிருக்கிறோம். இதனால், இந்தியாவிற்கே வழிகாட்டும் நிலையில் தமிழ்நாடு இருக்கிறது.

கடந்த கூட்டத்தில்கூட, உறுப்பினர்கள் பல்வேறு வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தீர்கள். அதை அடிப்படையாக வைத்து, கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில், 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காலநிலைக் கல்வியறிவு முன்னெடுப்பு குறித்த அறிவிப்பை வெளியிட்டோம். அதைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் திறமைமிகு 4 ஆயிரம் பள்ளியாசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். மிக விரைவில், காலநிலைக் கல்வியறிவு குறித்த பயிற்சிகள் வழங்கப்பட இருக்கிறது என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், பள்ளி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்த ஆண்டுக்கு இரண்டு முறை, மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் மூலமாக, நடத்தப்படும் ஒரு



நாள் கோடைக்கால மற்றும் குளிர்கால சிறப்பு முகாம்களை இரண்டு நாள் முகாம்களாக பள்ளிக் கல்வித்துறை மூலமாக நடத்த ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மேலும், கூல் ரூஃபிங் திட்டத்தை, தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் 202526ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் சேர்த்திருக்கிறோம். அம்பத்தூரில் இருக்கும் பெருந்தலைவர் காமராஜர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்பறைகளில், கூல் ரூஃபிங் எனப்படும் அதிக வெப்ப பிரதிபலிப்புமிக்க வெள்ளைப் பூச்சுகள் பூசப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக வகுப்பறைகளில் வெப்ப அளவினை கணக்கிடக்கூடிய சென்சார்கள் வைத்து கண்காணித்ததில், அறை வெப்ப நிலை 1.5 டிகிரி முதல் 3 டிகிரி வரை குறைந்திருக்கிறது.

இது குறித்த அறிக்கையின் அடிப்படையில், இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் இருக்கும் 297 பசுமைப் பள்ளிகளிலும் செயல்படுத்த இருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், மேற்சொன்ன இயக்கங்கள் மூலமாக, கார்பன் சமநிலை மையங்கள், காலநிலை மீள்திறன்மிகு கிராமங்கள், கடலோரப் பகுதிகளில், உயிர்க் கேடயங்கள் அமைத்தல் போன்ற, முக்கியமான காலநிலை மாற்றத் தடுப்பு மற்றும் தகவமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கடந்த அக்டோபர் மாதம் நீலகிரி, கோயம்புத்தூர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களுக்கான, கரிம நீக்க வழித்தடங்கள் குறித்த செயல்திட்டமும், தமிழ்நாட்டிற்கான காலநிலை நடவடிக்கை கண்காணிப்பு வலைதளமும் வெளியிடப்பட்டிருக்கிறது.

கடலூர் மாவட்டம், பிச்சாவரம் அருகே கிள்ளையில் காலநிலை மீள்திறன்மிகு கிராம திட்டத்திற்காக பிரத்யேகமான, திட்ட மேலாண்மை அலகுடன் கூடிய அலுவலகத்தையும் தொடங்கி வைத்திருக்கிறோம். மேலும், அங்கு இருக்கும் அரசு அலுவலகங்களில், சூரிய ஒளி மின்னாற்றல் உற்பத்தி, மக்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டிற்கான பயிற்சிகள், வெள்ள அபாயங்கள் ஏற்படாமலிருக்க பக்கிங்ஹாம் கால்வாய் தூர்வாரப்பட்டு சீரமைத்தல், பிச்சாவரம் படகு குழாமிற்கு மின்னாற்றலில் இயங்கக்கூடிய படகு வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த கிராமம் காலநிலை மீள்திறன்மிகு கிராமமாக மாற்றுவதற்கான முதல் படி எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.

கடலோர வாழ்விடங்களை, இயற்கை சார்ந்த தீர்வுகள் மூலம் மறுசீரமைக்கும் திட்டத்தின்கீழ், தொடர்ச்சியாக அலையாத்தி மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது. இதன் ரிசல்ட் என்ன தெரியுமா? தமிழ்நாட்டில் 4,500 ஹெக்டேர் பரப்பளவுக்கு இருந்த அலையாத்திக் காடுகள், 9,000 ஹெக்டேராக, அதாவது, இரண்டு மடங்காக அதிகரித்திருக்கிறது. இந்தச் சாதனையில் பங்கு வகித்த எல்லோருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர் நிலைகளைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வரும் தனி நபர்களையும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் ஊக்குவிக்கிறோம். மாவட்டத்திற்கு ஒருவர் என்று 38 பேருக்கு கடந்த ஜூன் 5 உலக சுற்றுச்சூழல் நாளில், ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் கூடிய, முதலமைச்சரின் நீர்நிலைப் பாதுகாவலர் விருது வழங்கியிருக்கிறோம்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம், நிலைத்தகு நடைமுறைகளைப் பின்பற்றும் தொழிற்சாலைகளுக்கு, தன்னார்வ பசுமைத் தரச் சான்றிதழ் வழங்கும் திட்டமானது, தொழிற்சாலைகளால் ஏற்படும் உமிழ்வுகளைக் கட்டுப்படுத்த உதவும் என்று நம்புகிறோம். உலகெங்கும் ஏற்படும் இயற்கைப் பேரிடர்களில், அதிகம் பாதிக்கப்படுபவர்களாக பெண்களும், பெண் குழந்தைகளும் இருக்கிறார்கள் என்று ஆய்வுகளில் உறுதியாகி இருக்கிறது.

அதனால், பாலின சமத்துவத்தை உறுதி செய்கின்ற விதத்தில் அரசின் திட்டங்களும், காலநிலை தடுப்பு மற்றும் தகவமைப்பு நடவடிக்கைகளும் இருக்க வேண்டும் என்று தனிப்பட்ட முறையில் உங்களிடம் நான் கோரிக்கை வைக்கிறேன். ஏனென்றால், நம்முடைய திராவிட மாடல் அரசு பெண்களுக்கான அரசாக அனைத்துத் துறைகளிலும் பெயர் பெற்றிருக்கிறது. அது இங்கும் தொடர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் பெண்களின் பங்குதான் அளப்பரியது. அதனால்தான், 'க்ளைமேட் வாரியர்ஸ்' என்கிற திட்டத்தின்கீழ் 100 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு, காலநிலை மாற்றம் மற்றும் நெகிழி ஒழிப்புப் பரப்புரையையும் மேற்கொள்ள, 100 இ ஆட்டோக்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் மொத்த பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தில் போக்குவரத்துத் துறையின் பங்கு 12 விழுக்காட்டிலிருந்து 19 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது என்று ஆய்வறிக்கைகளில் தெரிய வந்திருக்கிறது. அதுவும், கடந்த 2005 முதல் 2019க்கு இடைப்பட்ட காலத்தில், இது 3 மடங்கு அதிகரித்திருக்கிறது.

## 2 கிராம ஊராட்சிகளை பிரித்து 4 கிராம ஊராட்சிகளாக மறுசீரமைப்பு

திண்டுக்கல், டிச.18-

அரசாணை (நிலை) எண்344, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா 2(1)) துறை நாள்: 05.12.2025ன் படி, திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தமுள்ள 306 கிராம ஊராட்சிகளில் 02 கிராம ஊராட்சிகளை பிரித்து 04 கிராம ஊராட்சிகளாக மறுசீரமைப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனை திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடாக 08.12.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி கிராம ஊராட்சிகளைப் பிரித்து உருவாக்கப்படும்



புதிய கிராம ஊராட்சிகள் அடுத்து வரும் சாதாரண தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும் எனவும், அந்த உள்ளூர் ஊராட்சி பகுதிகளில் குடியிருந்து வருகின்ற எவரும் திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இந்த அறிவிக்கை குறித்த மறுப்பினை தெரிவிக்க விரும்பினால் அவர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு அந்த உள்ளூர் ஊராட்சி பகுதிகளில் குடியிருந்து வருகின்ற எவரிடமிருந்தும் மேலே கூறப்படும் காலக்கெடுவிற்குள் மறுப்பு எதும் பெறப்பட்டால், அதனை உரிய பரிசீலனை செய்து தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் டிச.18 முதல் 4 நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவும்!

சென்னை: டிச.18-

தமிழகத்தில் டிச.18ம் தேதி முதல் 4 நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் கிழக்கு திசை காற்றில் வேக மாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக, தென் தமிழகத்தில் நாளை (டிச.18) ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். வட தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

டிச. 19 முதல் 22ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 23ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்றும், நாளையும் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிமீ வேகத்திலும், இடையிடையே 65 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கடலூர் மாவட்டம் கொத்தவாச்சேரி, ராமநாதபுரத்தில் தலா 6 செமீ, மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம், கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை, லால்பேட்டை, அண்ணாமலை நகர், சிதம்பரம் ஆகிய இடங்களில் தலா 5 செமீ, வடகுத்து, காட்டுமன்னார்கோவில், சென்னை உத்தண்டி ஆகிய இடங்களில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## "முன்புபோல் 100 நாள் வேலைத் திட்டத்தில் ஊழல் செய்ய முடியாது என்று கவலையா?" முதல்வருக்கு அண்ணாமலை கேள்வி

சென்னை: டிச.18-

"முன்பு போல 100 நாள் வேலைத் திட்டத்தில் ஊழல் செய்ய முடியாது என்ற கவலையா?" என தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ' இந்த திட்டம் குறித்து, நேற்றே தெளிவான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறோம். நாட்டில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல், ஒரு தனி உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

ஒட்டமொத்த குடும்ப உறுப்பினர்களின் பெயரையும் சமஸ்கிருத மொழியில் வைத்துக் கொண்டு, ஹிந்தி எதிர்ப்பு என்று இன்னும் நாடகமாடிக் கொண்டிருப்பது நகைமுரண்.

100 நாள் வேலைத் திட்டத்தை, 150 நாட்களாக உயர்த்துவோம்



என்று அளித்த வாக்குறுதி நினைவிருக்கிறதா? முதல்வர் ஸ்டாலின். முன்பு போல 100 நாள் வேலைத் திட்டத்தில் ஊழல் செய்ய முடியாது என்ற கவலையா?' எனத் தெரிவித்துள்ளார்

மேலும், அவர் அந்த எக்ஸ் பதிவில் பகிர்ந்துள்ள தனது வீடியோவில், '2005 ல் 100 நாள் வேலைத் திட்டத்தை ஆரம்பித்தபோது மகாத்மா காந்தியின் பெயர் இல்லை. அவரின் பெயரை 2008 09 தேர்தலின்போதே வைத்தனர். காந்தி மீது மிகப்பெரிய மரியாதை பிரதமர் மோடிக்கு உள்ளது. பொறுப்பேற்ற உடனே ஸ்வச் பாரத் திட்டத்துக்கு காந்தியின் பெயரை பிரதமர் மோடி வைத்தார்.

இப்போது திட்டத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. 2005ல் இத்திட்டம் வந்தபோது இந்தியாவில் ஏழைகளின் எண்ணிக்கை 28% ஆகும். இப்போது நாட்டின் தீவிர வறுமை ஒரு சதவீதத்துக்கும் குறைவு. எனவே திட்டத்தில் பல மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளது. தற்போதைய திட்டத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தில் வேலை நாட்களின் எண்ணிக்கை 125 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

இப்போது மத்திய அரசு 60 சதவீதமும், மாநில அரசு 40 சதவீதமும் இத்திட்டத்துக்கு பங்களிப்பு வழங்க வேண்டும். மத்திய அரசு தனக்கு வரும் வருவாயில் மாநிலங்களுக்கு நிதிப்பகிர்வு செய்கிறது. யுபிஏ அரசைவிட நான்கு மடங்கு நிதியை எங்கள் அரசு வழங்குகிறது.

100 நாள் வேலைத் திட்டத்தால் செய்யப்படும் பணிகளால் மாநிலம் வளர்ச்சி பெறுகிறது. எனவே மாநில அரசு 40 சதவீதம் வழங்குவதில் என்ன தவறு. திட்டத்தின் தன்மை மாறுவதால் இப்போது 'விக்ஸித் பாரத்' அதாவது வளர்ந்த பாரதம் எனப் பெயரிட்டுள்ளார்கள், இதில் என்ன தவறு. இந்த பெயரை மகாத்மா காந்தியே பாராட்டுவார்கள். நாங்கள் பல திட்டங்களுக்கு காந்தியின் பெயரை வைத்துள்ளோம்.

இந்த புதிய திட்டத்தில் பயனாளிகள் வேலை கேட்டு 15 நாட்களுக்குள் வேலை கொடுக்கப்படவில்லை என்றால், அவர்களுக்கு பென்சன் கொடுக்கப்படும் என்ற வழிமுறையை கொண்டுவந்துள்ளார்கள். எனவே இத்திட்டம் மக்களுக்கு நல்ல பலனை கொடுக்கும்" என்று கூறினார்.




■ திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மாவட்ட தொழில் மையம் சார்பில் நடைபெற்ற தொழில் முனைவோருக்கான கடன் வழிகாட்டுதல் முகாமில், பயனாளிகளுக்கு தொழில் கடன் ஒப்பளிப்பு ஆணைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் துர்க பிரசாத், கல்வி கடன் மூத்த ஆலோசகர் வணங்காமுடி, பொது மேலாளர்கள் மாவட்ட தொழில் மையம் கார்த்திகை வாசன், சுஜாதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

# பிரதமர் மோடிக்கு எத்தியோப்பியாவின் மிக உயரிய விருது வழங்கி கவுரவிப்பு



ஆப்பிரிக்கா, டிச.18-

அடிஸ் அபாபா (எத்தியோபியா): ஆப்பிரிக்கா நாடான எத்தியோப்பியாவின் மிக உயரிய ‘கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோப்பியா’ விருதினை பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கி அந்நாட்டு பிரதமர் அபி அகமது அலி கவுரவித்துள்ளார்.

அரசு முறைப் பயணமாக ஜோர்டான் சென்ற பிரதமர் நரேந்திர மோடி அந்த பயணத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவுக்குச் சென்றார். அந்நாட்டுப் பிரதமர் அபி அகமது அலி, பிரதமர் மோடியை விமான நிலையத்துக்கே வந்து வரவேற்றார். இதையடுத்து, அடிஸ் அபாபாவில் உள்ள அறிவியல் அருங்காட்சியகத்துக்கு இருவரும் ஒரே காரில் சென்றனர். காரை, எத்தியோப்பியா பிரதமர் ஓட்டிச் சென்றார்.

இதையடுத்து, இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, எத்தியோப்பியாவின் மிக உயரிய ‘கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோப்பியா’ விருதினை பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கி அபி அகமது அலி கவுரவித்தார்.

அப்போது பேசிய பிரதமர் மோடி, ‘‘எத்தியோப்பியாவின் மிக உயர்ந்த சிவிலியன் விருது எனக்கு வழங்கப்பட்டுள்ளது. உலகின் மிகவும் பழமையான மற்றும் வளமான நாகரிகங்களில் ஒன்றால் கவுரவிக்கப்படுவது எனக்கு மிகுந்த பெருமைக்குரிய விஷயம். அனைத்து இந்தியர்கள் சார்பாக இந்த மரியாதையை நான் மிகுந்த பணிவுடனும் நன்றியுடனும் ஏற்றுக்கொள்கிறேன்'' என தெரிவித்தார்.

பின்னர் இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘‘எத்தியோப்பியாவின் மிக உயரிய விருதை வழங்கிய எத்தியோப்பிய மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் பிரதமர் அபி அகமது அலிக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வளர்ந்து வரும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் எத்தியோபியாவுடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கும் இந்தியா உறுதி பூண்டுள்ளது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விருதைப் பெறும் முதல் வெளிநாட்டுத் தலைவர் பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாடுகளில் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்ட விருதுகளில் இது 28வது விருதாகும். இதையடுத்து, எத்தியோப்பிய நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி இன்று உரையாற்றினார்.




# 100 நாள் வேலை திட்ட பெயர் மாற்றம், நேஷனல் ஹெரால்டு வழக்கை எதிர்த்து கர்நாடகாவில் காங்கிரஸ் போராட்டம்

பெலகவி, டிச18-

நேஷனல் ஹெரால்டு வழக்கு மற்றும் 100 நாள் வேலை திட்ட பெயர் மாற்றம் ஆகியவற்றைக் கண்டித்து கர்நாடகாவின் பெலகாவியில் முதல்வர் மற்றும் துணை முதல்வர் தலைமையில் காங்கிரஸ் கட்சி போராட்டத்தில் ஈடுபட்டது.


பெலகாவியில் சட்டப்பேரவை வளாகத்தில் உள்ள காந்தி சிலை முன்பாக இந்தப் போராட்டம் நடைபெற்றது. இதில், மாநில அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நேஷனல் ஹெரால்டு வழக்கு மற்றும் 100 நாள் வேலை திட்ட பெயர் மாற்றத்தைக் கண்டிக்கும் பதாகைகள் மற்றும் மகாத்மா காந்தியின் புகைப்படங்களை ஏந்தியவாறு அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

போராட்டம் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய துணை முதல்வர் டி.கே. சிவகுமார், ‘‘நேஷனல் ஹெரால்டு என்பது நமது நாட்டின் பெருமை. அது நமது சுதந்திரப் போராட்டத்தோடு தொடர்புடையது. ஜவஹர்லால் நேருவால் ஏற்படுத்தப்பட்டது. நேஷனல் ஹெரால்டு வழக்கில் அமலாக்கத் துறை என்னை தொடர்புபடுத்தி இருக்கிறது. நான் ஒரே ஒரு கேள்வியை மட்டும் எழுப்புகிறேன். ஏன் அவர்கள் இதுவரை எனக்கு முதல் தகவல் அறிக்கையின் நகலை வழங்கவில்லை? அமலாக்கத் துறையின் முகம் இன்று கிழிக்கப்பட்டுள்ளது'' என தெரிவித்தார்.

போராட்டம் குறித்துப் பேசிய தொழில்துறை அமைச்சர் எம்.பி. பாட்டீல், ‘‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்பது அப்போதைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராக இருந்த டாக்டர் மன்மோகன் சிங் மற்றும் சோனியா காந்தி ஆகியோரால் தொடங்கப்பட்டது. மாபெரும் வெற்றியைப் பெற்ற ஒரு திட்டம் இது. வேலை தேடி வெளியே செல்ல முடியாதவர்களுக்கு உள்ளூரிலேயே வேலை வழங்கும் திட்டம் இது. இந்த திட்டத்தால் கிராமப்புறங்களில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த திட்டம் நமது நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த மகாத்மா காந்தியின் பெயரில் உள்ளது. அவ்வாறு இருக்க காந்தியின் பெயரை ஏன் நீக்க வேண்டும்? இந்திய வரலாற்றிலேயே மிகவும் வெற்றி பெற்ற திட்டமாக இது இருப்பதால், இதனை பாஜகவால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் அவர்கள் இவ்வளவு கீழ்த்தரமாக இறங்கிவிட்டார்கள்'' என குற்றம் சாட்டினார்.

# வேலூர் பொற்கோவிலில் ஜனாதிபதி திரவுபதி சுவாமி தரிசனம்



வேலூர், டிச.18-

வேலூர், ஸ்ரீபுரம் நாராயணி பொற்கோவிலில் ஜனாதிபதி திரவுபதி முர்மு சுவாமி தரிசனம் செய்தார்.

வேலூர் மாவட்டம், அரியூர் அடுத்த ஸ்ரீபுரத்தில், ஸ்ரீ நாராயணி பீடம் பொற்கோவில் உள்ளது. இங்கு சுவாமி தரிசனம் செய்வதற்காக, ஜனாதிபதி திரவுபதி முர்மு வருகை புரிந்தார். அவரை கவர்னர் ரவி, மத்திய இணையமைச்சர் முருகன், தமிழக கைத்தறித்துறை அமைச்சர் காந்தி ஆகியோர் வரவேற்றனர்.

ஸ்ரீ நாராயணி அம்மன், 1,800 கிலோ வெள்ளியால் அமைக்கப்பட்ட விநாயகர், சொர்ணலட்சுமி, பெருமாள் ஆகிய கோவில்களில் ஜனாதிபதி சுவாமி தரிசனம் செய்தார். பின், சக்தி அம்மாவிடம் ஆசி பெற்றார். கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தியான மண்டபத்தை திறந்து வைத்து, மரங்களை நட்டார்

ஜனாதிபதி வருகையை முன்னிட்டு, கோவிலை சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



# டில்லியில் கடும் பனியால் விமான சேவை பாதிப்பு; பயணிகளுக்கு விமான நிறுவனங்கள் அறிவுறுத்தல்

டில்லி, டிச.18-

டில்லி உள்ளிட்ட வட மாநிலங்களில் கடும் பனியால் விமான சேவை பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் விமான நிறுவனங்கள் பயணிகளுக்கு முக்கிய அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளது.

கடந்த சில நாட்களாக டில்லியில் கடும் பனிப் பொழிவு நிலவுகிறது. கடும் பனிப்பொழிவால், 6 அடி துாரத்தில் சென்ற வாகனங்கள் கூட கண்ணுக்கு தென்படவில்லை. வாகன போக்குவரத்து போல, விமான சேவைகளும் பாதிக்கப்பட்டு உள்ளது.

இதனால் வட மாநிலங்களில் நிலவி வரும் பனிமூட்டம் காரணமாக சென்னையில் விமான நிலையத்தில் இருந்து செல்லும் 11 விமானங்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளது. விமானங்கள் திடீரென ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் கடும் அவதி அடைந்தனர்.

இது தொடர்பாக இண்டிகோ, ஆகாசா ஏர், ஸ்பைஸ்ஜெட் உள்ளிட்ட விமான நிறுவனங்கள் பயணிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளது. இண்டிகோ விமான நிறுவனம் வெளியிட்டுள்ள பதிவில், ''பயணிகள் விமான நிலையத்திற்கு வருவதற்கு முன்பு விழிப்புடன் இருக்க வேண்டும்.

விமான நிறுவனங்களின் இணையதளத்தில் பயணிகள் தங்கள் விமானங்களின் தற்போதைய நிலவரங்களை சரிபார்க்க வேண்டும். வட இந்தியாவில் குளிர்கால என்பதால் மூடுபனி காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்படும் சூழல் நிலவுகிறது'' என தெரிவிக்கப்பட்டு உள்ளது.



# மூணார் அருகே மறையூர் பள்ளி மாணவ மாணவிகள் கோவில் கடவில் உள்ள ஔவையார் முதியோர் இல்லத்திற்கு உணவு வழங்கி பிராத்தனை

இடுக்கி டிச.18-

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் மூணார் அருகே மறையூரில் ஜெய் மாதா பப்ளிக் பள்ளி லிரிநி மாணவ மாணவிகள் அனைவரும் தங்களது வீட்டிலிருந்து உணவு கொண்டு வந்து ஆதரவு அற்ற முதியோர்களுக்கு வழங்கப்பட்டதுதொடர்ந்து கோவில் கடவில் உள்ள ஔவையார் முதியோர் இல்லத்தில் சென்று குழந்தைகள் ஆதரவற்றோர்களான முதியோர்களுக்காக பிரார்த்தனை செய்தனர்பின்னர் தாங்கள் கொண்டு வந்திருந்த உணவுகளை அவர்களுக்கு கொடுத்து மகிழ்ந்தனர்இன்நிகழ்வானது பள்ளி நிர்வாகம் மற்றும் ஆசிரியர் அம்பிகா சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர் குழந்தைகள் முதியோர் இல்லத்திற்கு உணவு வழங்கிய நிகழ்வு அப்பகுதியில் நெகிழ்சியும், வரவேற்பையும் பெற்றது..

# 2014 முதல் இந்தியா சீனா எல்லையில் ஊடுருவல் இல்லை; மத்திய அரசு தகவல்

புதுடில்லி, டிச.18-

2014ம் ஆண்டு முதல் சட்டவிரோதமாக ஊடுருவியவர்கள் 23,926 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வங்கதேச எல்லையில் ஊடுருவல் அதிகம்; சீன எல்லையில் எந்த ஊடுருவல் முயற்சியும் நடக்கவில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.



ஊடுருவல் தொடர்பாக லோக்சபாவில் திரிணமுல் காங்கிரஸ் எம்பிக்கள் எழுப்பிய கேள்விக்கு உள்துறை இணையமைச்சர் நித்யானந்த ராய் எழுத்துப்பூர்வமாக வழங்கிய அறிக்கையில்; இந்திய எல்லையை ஒட்டியுள்ள அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம், மியான்மர், நேபாளம், பூடான் ஆகிய நாடுகளில் இருந்து, 2014ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு வரை, 20,806 பேர் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்றுள்ளனர். அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தாண்டின் ஜனவரி முதல் நவம்பர் வரையில் 3,120 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.அதிகபட்சமாக இந்தியா வங்கதேசத்தில் இருந்து 18,851 பேர் ஊடுருவ முயன்றுள்ளனர். மியான்மரில் இருந்து 1,165 பேரும், பாகிஸ்தானில் இருந்து 556 பேரும், நேபாளம் பூடானில் இருந்து 234 பேரும் சட்டவிரோதமாக ஊடுருவ முயன்று கைதாகியுள்ளனர்.

இதன்மூலம், இந்தியாவின் மேற்கு மற்றும் கிழக்கு எல்லைப்பகுதிகளில் ஊடுருவல் முயற்சிகள் அதிகளவில் இருப்பதை இந்தப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. அதேவேளையில், வடக்கே சீனாவுடனான எல்லையில் ஊடுருவல் சம்பந்தப்பட்ட வழக்குகள் எதுவும் பதிவாகவில்லை. 2025ம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரையில் இந்தியா வங்கதேச எல்லைப் பகுதியில் 2,556 பேர் ஊடுருவ முயன்று கைதாகியுள்ளனர்.

பாகிஸ்தானில் இருந்து ஊடுருவ முயன்ற 49 பேரை எல்லைப் பாதுகாப்பு படையினர் சிறை பிடித்துள்ளனர், இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பாகிஸ்தானுடனான எல்லையில் 93 சதவீதம் பகுதிகளும், வங்கதேசத்துடனான எல்லையில் 80 சதவீதம் பகுதிகளிலும் வேலி அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# தி.மு.க., நிர்வாகி மீது தாக்குதல்: சீமான் மீது 4 பிரிவுகளில் வழக்கு

விருத்தாசலம், டிச.18-

தி.மு.க., நிர்வாகியை தாக்கிய விவகாரத்தில், சீமான் உள்ளிட்ட 16 பேர் மீது, நான்கு பிரிவுகளில் போலீசார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.



கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தை சேர்ந்தவர் ரங்கநாதன், 44. பெட்ரோல் பங்க் உரிமையாளரான இவர், தி.மு.க., கிழக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளராக உள்ளார். இவர், டிச., 14ம் தேதி இரவு 7:15 மணியளவில், விருத்தாசலத்தில் நடந்த அரசு பணியாளர் சங்க மாநாட்டில் பங்கேற்ற நா.த.க., தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் காரை மறித்ததாக கூறி, அக்கட்சியினரால் தாக்கப்பட்டார்.

இதுகுறித்து, விருத்தாசலம் போலீசில் அளித்த புகாரின்படி, சீமான் உள்ளிட்ட 16 பேர் மீது, நான்கு பிரிவு களில் வழக்கு பதிந்துள்ளனர்.

அதேபோல், நா.த.க., மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜவேல் புகாரின்படி, ரங்கநாதன் மீது இரண்டு பிரிவுகளில் போலீசார் வழக்கு பதிந்து விசாரிக்கின்றனர்.

# SIR - வேலூர் மாவட்ட 5 பேரவை தொகுதிகளில் 2.15 லட்சம் வாக்காளர்கள் நீக்கம்?



வேலூர், டிச.18-

வேலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் (எஸ்.ஐ.ஆர்) முடிவுற்ற நிலையில் நாளை மறுதினம் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. தற்போதுள்ள பட்டியலில் உள்ள 13.03 லட்சம் வாக்காளர்களில் சுமார் 2.15 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் (எஸ்.ஐ.ஆர்) கடந்த நவ. 4ம் தேதி தொடங்கியது. இந்த பணிகள் டிச. 4ம் தேதியுடன் முடிவுடையும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் முதலில் டிச. 11ம் தேதி என்றும், பிறகு டிச. 14ம் தேதி வரையும் நீட்டிக்கப்பட்டது. தற்போது, எஸ்.ஐ.ஆர் பணிகள் நிறைவு பெற்ற நிலையில் டிச.19ம் தேதி (நாளை மறுதினம்) வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

வேலூர் மாவட்டத்தில் உள்ள 5 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான எஸ்.ஐ.ஆர் பணிகள் முடிவுற்றுள்ளன. அக்.27ம் தேதி அன்றைய நிலவரப்படி மாவட்டத்தில் உள்ள 5 சட்டப்பேரவை தொகுதிகளில் மொத்தம் 13 லட்சத்து 3 ஆயிரத்து 30 வாக்காளர்கள் இருந்தனர். 1,314 வாக்குச்சாவடி அலுவலர்கள் மூலம் வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று எஸ்.ஐ.ஆர் படிவங்கள் வழங்கப்பட்டன.

மேலும், பூர்த்தி செய்த படிவங்களை திரும்பப்பெறும் பணியும் நடைபெற்றன. இவற்றை வாக்குச்சாவடி அலுவலர்களின் கைபேசி செயலி வழியாக பதிவேற்றம் செய்யும் பணி இரவு, பகலாக நடைபெற்றன. வாக்காளர்களால் பூர்த்தி செய்து திரும்ப அளிக்கப்பட்ட எஸ்.ஐ.ஆர் படிவங்கள் மட்டும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உயிரிழந்த வாக்காளர்கள் மற்றும் நிரந்தரமாக இடம் பெயர்ந்தவர்களின் படிவங்கள் குறித்து மீண்டும் வீடு, வீடாகச் சென்று வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களால் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டன. உரிய விசாரணைக்குப் பிறகே வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்கவும் நடவடிக்கை எடுத்தனர்.

வேலூர் மாவட்டத்தில் நடந்து முடிந்துள்ள எஸ்.ஐ.ஆர் திருத்த பணியில் சுமார் 10 லட்சத்து 88 ஆயிரம் படிவங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 2002 ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் சுமார் 3.44 லட்சம் வாக்காளர் பதிவாகியுள்ளனர். இவர்களின் உறவினர்கள் என்ற அடிப்படையில் சுமார் 7.22 லட்சம் வாக்காளர்களாக இடம் பெற்றுள்ளனர்.

எஸ்.ஐ.ஆர் ஆய்வில் உயிரிழந்தவர்கள் 48 ஆயிரம் பேரும், நிரந்தரமாக வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்தவர்கள் சுமார் 72 ஆயிரம் பேரும், இரட்டை பதிவு கொண்ட வாக்காளர்கள் 10 ஆயிரம் பேரும், முகவரியில் இல்லாத வாக்காளர்கள் சுமார் 84 ஆயிரம் பேர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் இருந்து ஏறக்குறைய 2.15 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதில், குடியாத்தம் தனி தொகுதியில் சுமார் 58 ஆயிரம் பேரும், வேலூர் தொகுதியில் சுமார் 54 ஆயிரம் பேரும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட உள்ளதாக தெரிகிறது.

மேலும், காட்பாடி தொகுதியில் சுமார் 35 ஆயிரம் பேர், அணைக்கட்டு தொகுதியில் சுமார் 36 ஆயிரம் பேர், கே.வி.குப்பம் (தனி) தொகுதியில் சுமார் 29 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

அதேபோல், மாவட்டத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள 10.88 லட்சம் வாக்காளர்களில் 2002ம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் உறவினர் தொடர்பு இல்லாத சுமார் 19 ஆயிரம் வாக்காளர்கள் இருப்பது தெரியவந்துள்ளது. இவர்களுக்கு டிச.19ம் தேதிக்கு பிறகு நோட்டீஸ் வழங்கப்பட உள்ளது.

நோட்டீஸ் பெற்ற வாக்காளர்கள் இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ள 11 ஆவணங்களில் ஏதாவது ஒன்றை சமர்ப்பித்து உறுதி செய்து கொள்ள வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆவணங்களை சமர்ப்பிக்காத வாக்காளர்களின் பெயர்கள் இறுதி வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காம்பவுண்ட் சுவர் பழுது கண்ணுக்கு தெரியலையா? ரீல்ஸ் போட்ட திமுக எம்எல்ஏ.,வை வெளுக்கும் நெட்டிசன்கள்

சென்னை, டிச.18-

திருவள்ளூரில் சுவர் இடிந்து மாணவன் பலியான பள்ளிக்கு, சில தினங்களுக்கு முன் ஆய்வுக்கு போன திமுக எம்எல்ஏ., 'முதல்வர் யார், துணை முதல்வர் யார்' என்றெல்லாம் மாணவர்களிடம் கேள்வி கேட்டு ரீல்ஸ் வெளியிட்டார். இப்படியெல்லாம் செய்யத்தெரிந்த எம்எல்ஏ.,வுக்கு பழுதான காம்பவுண்ட் சுவர் தெரியவில்லையா? என இணையவாசிகள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

திருவள்ளூர் அருகே ஆர்.கே.பேட்டை ஒன்றியம், கொண்டாபுரம் அரசு உயர்நிலை பள்ளியில், ஏழாம் வகுப்பு படித்த மாணவன், மதிய உணவு சாப்பிடும்போது, சுவர் இடிந்து விழுந்து சம்பவ இடத்திலேயே பலியானான். பராமரிப்பில் அரசு காட்டிய அலட்சியமே உயிர்பலிக்கு காரணம் என, மாணவரின் உறவினர்கள் பள்ளியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இந்த சம்பவம் தொடர்பாக, பள்ளி தலைமை ஆசிரியர் தியாகராஜன், முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர் உள்ளிட்ட 3 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இந்த பள்ளிக்கு சில நாள் முன் ஆய்வுக்கு திருத்தணி திமுக எம்எல்ஏ சந்திரன் சென்று இருந்தார். மாணவர்களிடம், கேள்விகளை கேட்டு அதை ரீல்ஸ் எடுத்து இன்ஸ்டாகிராமில் பதிவிட்டார். அந்த வீடியோவில் மாணவர்களிடம், முதல்வர் பெயர் என்ன? துணை முதல்வர் பெயர் என்ன, கல்வி அமைச்சர் யார் என்றெல்லாம் கேட்டு இருந்தார். அவரது கேள்வி, மாணவர்களின் பதில்களை ரீல்ஸ் வீடியோவாக தயார் செய்து இணையத்தில் வெளியிட்டிருந்தார்.

இப்போது அந்த வீடியோவை பகிர்ந்து இணையவாசிகள், எம்எல்ஏ.,வை விமர்சிக்கின்றனர்.

''பள்ளிக்கு ஆய்வு சென்ற எம்எல்ஏவுக்கு, காம்பவுண்ட் சுவர் பழுதாகி இருந்தது தெரியவில்லையா? அதை சற்று கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து இருந்தால், இந்த துயர சம்பவம் நிகழ்ந்து இருக்காது, பள்ளிக்கூடத்திற்குச் சென்று ரீல்ஸ் மட்டும் எடுக்காமல் மாணவர்கள் நலன் கருதி, நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்த வேண்டும்'' என கருத்துகளை இணையவாசிகள் பதிவிட்டு வருகின்றனர்.

# ஆப்பரேஷன் சிந்தூர் குறித்து சர்ச்சை பேச்சு; மன்னிப்பு கேட்க காங்கிரஸ் மூத்த தலைவர் மறுப்பு

புனே, டிச.18-

ஆப்பரேஷன் சிந்தூர் குறித்து சர்ச்சை கருத்து கூறியது மஹாராஷ்டிரா முன்னாள் முதல்வரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான பிரித்விராஜ் சவுகான் தொடர்பாக மன்னிப்பு கேட்க மறுத்துள்ளார்.



புனேவில் செய்தியாளர்களை சந்தித்த அவர், ஆப்பரேஷன் சிந்தூரின் முதல்நாளில் நம் இந்திய ராணுவம் முற்றிலுமாக தோல்வியடைந்து விட்டதாக கூறியிருந்தார். அவரது இந்தப் பேச்சுக்கு பாஜ கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இந்திய ராணுவத்தை அவமதிக்க யாருக்கும் உரிமை கிடையாது என்றும், நாட்டின் நலன்களை விட, இந்திய ராணுவத்தை அவமதிப்பதே காங்கிரசுக்கு பழக்கமாகி விட்டது என்று பாஜ மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான கிரிராஜ் சிங் குற்றம்சாட்டியிருந்தார். மேலும், அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று பாஜ உள்ளிட்ட ஆளும் கட்சியினர் வலியுறுத்தினர்.


இந்த நிலையில், இன்று செய்தியாளர்களை சந்தித்த பிரித்விராஜ் சவுகான், இந்த விவகாரத்தில் மன்னிப்பு கேட்க முடியாது என்று திட்டவட்டமாக கூறியுள்ளார்.

மேலும், அவர் கூறியதாவது; நான் ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும். கேள்வி கேட்க எனக்கு உரிமை இருக்கிறது. பஹல்காமில் நடந்த சம்பவம் குறித்து நியாயமான விசாரணை நடத்த வேண்டும். ஆப்பரேஷன் சிந்தூர் தொடர்பாகன விபரங்களை பொதுமக்களுக்கு வெளியிட வேண்டும். லோக் சபாவில் அறிமுகப்படுத்தப்பட்ட அணுசக்தி தனியார்மயமாக்கல் மசோதா மற்றும் ஷாந்தி மசோதா ஆகியவற்றில் இருந்து பொதுமக்களை திசைதிருப்பவே என்னுடைய கருத்துக்களை பெரிதுபடுத்துகின்றனர், என்றார்.

# ஐ.டி., பெண்ணுக்கு டிஜிட்டல் கைது மிரட்டல்: ரூ.2 கோடி கொடுத்து ஏமாந்த அவலம்

பெங்களூரு, டிச.18-

'டிஜிட்டல்' கைது மிரட்டலுக்கு பயந்து தனக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பு வீடு, நிலத்தை விற்ற ஐ.டி., பெண் ஊழியர், 2 கோடி ரூபாயை மோசடி கும்பலிடம் தந்து ஏமாந்துள்ளார்.



பெங்களூரு எச்.ஏ.எல்., விக்ஞான் நகரில் வசிப்பவர் பவிதா தாஸ், 57. ஒயிட்பீல்டில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் மென்பொறியாளராக வேலை செய்கிறார். கடந்த ஆகஸ்ட் மாதம், மொபைல் பவிதாவின் போனுக்கு ஒரு அழைப்பு வந் தது. எதிர்முனையில் பேசிய நபர், தன்னை மும்பை சைபர் கிரைம் போலீஸ் என்று அறி முகம் செய்துள்ளார்.

பத்மபூஷண் விருது பெற்ற விஞ்ஞானியிடம் ரூ.57 லட்சம் மோசடி

'உங்கள் பெயருக்கு, வெளிநாட்டில் இருந்து, 'புளூ டார்ட்' நிறுவன கூரியரில் பார்சல் வந்துள்ளது. அந்த பார்சலில் போதைப்பொருள் உள்ளது. உங்களை கைது செய்ய உள்ளோம்' என்று கூறினார். இதனை கேட்டு அதிர்ச்சி அடைந்த அவர், 'அந்த பார்சல் தனக்கு வந்திருக்காது' என, பதிலளித்தார். எதிர்முனையில் பேசிய நபர், 'உங்களை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற வேண் டும் என்றால், நான் கூறும் வங்கிக்கணக்குகளுக்கு பணம் அனுப்ப வேண்டும்; வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது; வீட்டில் வைத்தே உங்களிடம் விசாரிப்பேன்' என்று மிரட்டியுள்ளார்.

இதனால் பயந்து போன பவிதா தாஸ், அவர்கள் கேட்ட பணத்தை ஏற்பாடு செய்வதற்காக, தனக்கு சொந்தமான ஒரு அடுக்குமாடி குடியிருப்பு வீடு மற்றும் இரண்டு நிலங்களை விற்று அந்த மோசடி கும்பல் கேட்கும் போதெல்லாம், பல வங்கி கணக்குகளுக்கு, 2 கோடி ரூபாய் வரை அனுப்பி உள்ளார்.

திடீரென அந்த நபரை தொடர்பு கொள்ள முடியவில்லை. டிஜிட்டல் கைது என்று மிரட்டி, தன்னிடம் இருந்து 2 கோடி ரூபாய் பறித்ததை பவிதா உணர்ந்தார். ஒயிட்பீல்டு சைபர் கிரைம் போலீசில் புகார் செய்தார். போலீசார் விசாரணையில் இறங்கி உள்ளனர்.



■ கூடுதல் இயக்குனர் (மறு நில அளவை) பதவியில் இருந்து, கூடுதல் இயக்குனர் (பொது) பதவிக்கு பணியிட மாறுதல் பெற்றுள்ள, கூடுதல் இயக்குனர் வெங்கடேசன், மத்திய நில அளவை இணை இயக்குனராக இருந்து வரும் சரவணன் அவர்கள் கூடுதல் இயக்குனர் (மறுநில அளவை) பதவி உயர்வு பெற்றமைக்கும் வாழ்த்துக்களை TNSDOA தமிழ்நாடு நில அளவைத்துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பாகவும், TNGOU தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பாகவும், ADAF- தமிழ்நாடு அனைத்து துறை சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாகவும்,FEDRA வருவாய் துறை சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



■ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாநகராட்சி, அ.செட்டிபாளையம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 15 பள்ளிகளில், 109 வகுப்பறைகள் மற்றும் 10 ஆய்வக கட்டடங்கள் கட்டும் பணியினை துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, திருப்பூர் மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், திருப்பூர் மாநகராட்சி 1ம் மண்டலத்தலைவர் உமாமகேஸ்வரி, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை) முத்துசரவணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் புனிதா அந்தோணியம்மாள் ஆகியோர் உள்ளனர்.




# திண்டுக்கல் ரயில் நிலையத்தில் 17 கிலோ குட்கா பறிமுதல்

திண்டுக்கல், டிச.18-

திண்டுக்கல் ரயில் நிலையத்திற்கு இன்று காலை வந்த புருலியாவிலிருந்து திருநெல்வேலி வரை செல்லும் திருநெல்வேலி அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரயிலில் ரயில்வே காவல் நிலைய ஆய்வாளர் தூய மணி வெள்ளைச்சாமி தலைமையில்,சிறப்பு சார்பு ஆய்வாளர் மணிகண்டன் காவலர்கள் மணிமாறன், லோகேஷ், கோமதி, சித்ரா ஆகியோர் தீவிர சோதனை மேற்கொண்டனர்அப்போது முன்பதிவு இல்லா பெட்டியில் இருக்கைக்கு அடியில் கேட்பாரற்று இருந்த பேக்கை சோதனை செய்த போது அதில் அரசால் தடை செய்யப்பட்ட 17 கிலோ குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் இருப்பது தெரியவந்தது.

அதனை தொடர்ந்து ரயில்வே போலீசார் குட்கா மற்றும் புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# கடலூர் டவுன்ஹால் கட்டணத்தை குறைக்க இந்திய குடியரசு கட்சி பாலவீரவேல் கோரிக்கை

கடலூர், டிச.18-

மாநகரத்தின் மையத்தில் நகர அரங்கம் அமைந்துள்ளது. இந்த அரங்கத்தை முன்னாள் முதல்வர் காமராஜர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. பொருளாதரத்தில் பின் தங்கிய பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இதனால் இப்பகுதியில் வசிக்கும் ஏழை எளியவர்கள் பயன்படுத்தினார்கள். சமிபத்தில் அந்த அரங்கத்தை நெய்வேலி என்எல்சி நிறுவனமானது புதுப்பித்து, புதிய பொளிவுடன் மாவட்ட நிர்வாகத்திற்கு கொடுத்தது. அவை சிலநாட்களில் நடைமுறைக்கு,வந்துள்ளது.



தனியார் திருமண மண்டபத்திற்கு இணையாக ஒருநாளைக்கு வாடகையாக, ரூபாய் 60 ஆயிரமும் மற்றும் உணவுக் கூடத்தோடு ரூபாய் 90.ஆயிரம் என்று நிர்ணிக்கப்பட்டுள்ளது ஏழை எளிய மக்களுக்கு எட்டாக்கனியாகும். அரசானது லாப நோக்கு கணக்கு பார்க்ககூடாது. போர்கால அடிப்படையில் உள்ளூர் அமைச்சர் முதல் சட்டமன்ற உறுப்பினர் வரை தலையிட்டு குறைந்த கட்டணத்தில் செயல்பட வழிவகை செய்யவேண்டும். இவ்வாறு இந்திய குடியரசு கட்சி கடலூர் மாவட்ட தலைவர் பாலவீரவேல் கோரிக்கை விடுத்துள்ளார்

# "பாமகவை கைப்பற்ற அன்புமணி பம்மாத்து" அடுக்கடுக்காக வசைபாடிய ராமதாஸ்!

சென்னை, டிச.18-

"எனது பெயரை அன்புமணி பயன்படுத்தக் கூடாது. கட்சியைக் கைப்பற்ற பம்மாத்து வேலைகளை தொடர்ந்து செய்து வருகிறார்." என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் தலைமையில் அக்கட்சியின் நிர்வாகக் குழு கூட்டம் இன்று நடந்தது. பின்னர், அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "அன்புமணி பாமகவின் தலைவர் அல்ல, அவருக்கு சின்னமும் ஒதுக்கப்படவில்லை என்று நாங்கள் தொடுத்த வழக்கில் டெல்லி உயர் நீதிமன்றமும், இந்திய தேர்தல் ஆணையமும் உறுதிப்படுத்தியுள்ளது.

பல மாதங்களுக்கு முன்பு கட்சியில் இருந்து நீக்கப்பட்ட அன்புமணி, கட்சியின் சின்னத்தை பெயரை பயன்படுத்தக் கூடாது. என் பெயரையும் அவரும், அவர் தரப்பினரும் பயன்படுத்தக் கூடாது. இதை சொல்லுகிறவன் இந்த கட்சியை உருவாக்கிய நான்.

ஆனால், அன்புமணியும் அவரது ஆதரவாளர்களும் தொடர்ந்து அதிகளவில் ஆயிரக்கணக்கான பொய்மூட்டைகளை அவிழ்த்து விடுகின்றனர். கட்சியைக் கைப்பற்ற பம்மாத்து வேலைகளை அன்புமணி தொடர்ந்து செய்து வருகிறார். இதை வன்மையாக கண்டிக்கிறேன். அவருக்கு பல்வேறு பதவிகளை கொடுத்து அழகு பார்த்தேன். தீட்டிய மரத்திலேயே கூர் பாய்ச்சியதைப்போல் பாமக என்னும் ஆலமரத்தின் கிளையை வெட்ட ஆரம்பித்திருக்கிறார். இதனுடைய பலன் கீழே விழுவதை தவிர எதுவும் இல்லை .

தமிழகம் முழுவதும் 96,000 கிராமங்களுக்கு சென்று ஆலமரம் போல வளர்ந்த கட்சிதான் பாமக. எனக்கு கூட்டணி குறித்து பேச இந்த நிர்வாகக் குழு முழு உரிமையும் வழங்கியுள்ளது.

அவர், அன்புமணி ராமதாஸ் அல்ல; அன்புமணி மட்டுமே. அவரை பாமகவில் இருந்து நீக்கிவிட்டேன், இருப்பினும் அவர், வேட்புமனுக்களை வாங்கி வருகிறார். டெல்லி தேர்தல் ஆணையத்தின் உத்தரவையும் மீறி அன்புமணி செயல்பட்டு வருகிறார். தவறான புள்ளி விவரங்களை கொடுத்து தேர்தல் ஆணையத்தையே ஏமாற்றி இருக்கிறார்கள். நிச்சயம் வெற்றிக் கூட்டணியை அமைப்பேன்." என்றார்.

# வழக்கறிஞர் ஜோதி மன்னிப்பு கேட்க வேண்டும்; ஹிந்து அமைப்புகள் வலியுறுத்தல்

சென்னை, டிச.18-

'உயர் நீதிமன்றத்தில் வாதிடும்போது, முருக கடவுள் பற்றி கிண்டலடித்த வழக்கறிஞர் ஜோதி மன்னிப்பு கேட்க வேண்டும்' என, ஹிந்து அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

அதன் விபரம்:

விஸ்வ ஹிந்து பரிஷத் அகில பாரத இணை பொதுச்செயலர் ஸ்தாணுமாலயன்: உயர் நீதிமன்றத்தில் ஹிந்து சமய அறநிலையத் துறை சார்பில் ஆஜரான ஜோதி, 'முருகனுக்கு இரண்டு மனைவியர் இருக்கலாம். ஆனால், ஒரு இடத்தில் மட்டும்தான் தீபம் ஏற்ற முடியும்' என்று கிண்டலடித்திருக்கிறார்.



ஹிந்து பக்தர்கள் கொடுக்கும் பணத்தில் ஜோதிக்கு, அறநிலையத் துறை கட்டணம் கொடுக்கும். ஹிந்துக்களின் கையை கொண்டே ஹிந்துக்களின் கண்களை குத்துவது போல, ஹிந்து பக்தர்களின் பணத்தை வாங்கிக் கொண்டு, ஹிந்து கடவுள்களை இழிவுபடுத்தியிருக்கிறார் ஜோதி. ஹிந்து மதம், ஹிந்து கடவுள்களை கிண்டல், கேலி செய்வதை, தி.மு.க., வழக்கமாக கொண்டுள்ளது. அதையே ஜோதியும் செய்திருக்கிறார்.

இதற்காக, அவர் ஹிந்துக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். திருப்பரங்குன்றம் வழக்கிலிருந்து ஜோதியை ஹிந்து சமய அறநிலையத் துறை விடுவிக்க வேண்டும்.

ஹிந்து முன்னணி மாநில செய்தித் தொடர்பாளர் இளங்கோவன்: திருப்பரங்குன்றம் வழக்கில், உயர் நீதிமன்ற மதுரை கிளையில், ஹிந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஆஜரான தி.மு.க.,வைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜோதி, 'முருகனுக்கு இரண்டு மனைவியர் இருக்கலாம். அதற்காக இரண்டு இடங்களில் தீபம் ஏற்ற முடியுமா' என, வக்கிரமான வாதத்தை முன்வைத்து உள்ளார்.

ஹிந்து விரோத தி.மு.க.,வின் வக்கிர சிந்தனை, ஜோதியின் வார்த்தைகளில் வெளிவந்துள்ளது. இதை விட முருகபெருமானை யாரும் அவமதிக்க முடியாது. வேறு மத கடவுள் பற்றி, இப்படி கிண்டலடிக்கும் துணிவு ஜோதிக்கு உள்ளதா? ஹிந்து கடவுள்களை கேவலப்படுத்தும் இதுபோன்ற கருத்துகளை நீதிமன்றம் கண்டிக்க வேண்டும்.

பா.ஜ., மாநில இளைஞரணி செயலர் சூர்யா: திருப்பரங்குன்றம் வழக்கில், வாதம் என்ற பெயரில், தமிழ் கடவுள் முருகபெருமானின் திருமண வாழ்வை உதாரணம் காட்டி, ஹிந்து சமய அறநிலையத் துறை வழக்கறிஞர் ஜோதி பேசியிருப்பது கண்டனத்திற்குரியது.

ஹிந்து தெய்வங்களை இழிவுபடுத்தும் வழக்கத்தை, ஒருபோதும் தி.மு.க., கைவிடாது என்பதையே இது காட்டுகிறது. அறநிலையத்துறை என்பது கோவில்களைப் பேணி பாதுகாக்கவா அல்லது இறை நம்பிக்கையைச் சிதைக்கவா என்பதற்கு, அமைச்சர் சேகர்பாபு என்ன பதில் சொல்லப் போகிறார்? இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.



## அச்சம்பட்டி கிராமத்தில் தார் சாலைக்கு அடிக்கல் நாட்டு விழா வெங்கடேசன் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்

அலங்காநல்லூர். டிச.18-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள அச்சம்பட்டி கிராமத்தில் தார் சாலை அமைப்பதற்கு பூமி பூஜை விழா நடைபெற்றது. அச்சம்பட்டி முதல் வலசை வரை இரண்டு கிலோமீட்டர் தொலைவில் 1 கோடியே 90 லட்சம் செலவில் தார் சாலை அமைப்பதற்கான பூமி பூஜையினை சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், கலந்து கொண்டு தொடங்கிவைத்தார். இதில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கதிரவன், வள்ளி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சங்கரி,திமுக ஒன்றிய செயலாளர்கள்தன்ராஜ், அருண், ஒன்றிய துணைச் செயலாளர் வ ொவி டம ருதூர்கார்த்திகேயன்,பேரூராட்சி தலைவர் ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ், துணைத்தலைவர் சுவாமிநாதன், முன்னாள்ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, சேதுசீனிவாசன், தண்டலை சரவணன், ரவிச் சந்திரன் ஜெயபிரகாஷ்,முன்னாள் பேரூர் துணைச் செயலாளர் கண்ணன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் நடராஜன், ஊ ராட்சி செயலர் முருகேஸ்வரி,ஒப்பந்ததாரர்குமார்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்சந்தனகருப்பு,சோழவந்தான் தொகு இளைஞரணி நிர்வாகிகள் ரியாஸ்கான், பிரவீன் பாலகிருஷ்ணன்,பண்ணகுடிபாண்டி,உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தீபத்தூணில் தீபம் ஏற்றாத விவகாரம்: நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தலைமைச்செயலர், ஏடிஜிபி ஆஜர்



முருகானந்தம் டேவிட்சன் தேவாசீர்வாதம் இனிகோ திவ்யன்

மதுரை, டிச.18-

திருப்பரங்குன்றம் மலை தீபத் தூணில் தீபம் ஏற்றாத விவகாரத்தில், தலைமைச்செயலாளர், சட்டம் ஒழுங்கு ஏடிஜிபி ஆகியோர், நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்காக காணொளி மூலம் ஐகோர்ட் மதுரை கிளையில் ஆஜரானார்கள். அறிக்கை தாக்கல் செய்ய தலைமைச்செயலர் அவகாசம் கோரிய நிலையில், வழக்கை ஜனவரி 9ம் தேதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார்.

மதுரை மாவட்டம் எழுமலை ராம ரவிக்குமார் தாக்கல் செய்த மனுவை, விசாரித்த தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், 'திருப்பரங்குன்றம் மலையில் வழக்கமான இடங்களை தவிர, தீபத்தூணிலும் டிச., 3ல் கார்த்திகை தீபத்தை சுப்பிரமணியசுவாமி கோவில் நிர்வாகம் ஏற்ற வேண்டும்.'இந்த ஆண்டு முதல் தீபத்தூணிலும் கார்த்திகை தீபம் ஏற்றப்படுவதை உறுதி செய்வது போலீசாரின் கடமை' என, உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை நிறைவேற்றாததால், 'கலெக்டர் பிரவீன்குமார், போலீஸ் கமிஷனர் லோகநாதன், கோவில் செயல் அலுவலர் யக்ஞ நாராயணன் மீது நீதிமன்ற அவமதிப்பின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்' என, ராம ரவிக்குமார் மனு தாக்கல் செய்தார்.இதை அவசர வழக்காக டிசம்பர், 3ல் விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், 'உச்சிப் பிள்ளையார் கோவிலில் மாலை, 6:00 மணிக்கு தீபம் ஏற்றப்பட்டது. தீபத்தூணில் தீபம் ஏற்றவில்லை. பிற மனுதாரர்கள் உட்பட, 10 பேரை மனுதாரர் அழைத்துச் செல்லலாம். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க சி.ஐ.எஸ்.எப்., வீரர்களை அனுப்ப உயர்நீதிமன்ற சி.ஐ.எஸ். எப்., கமாண்டன்டிற்கு உத்தரவிடுகிறேன்' என்றார்.

இதை எதிர்த்து அரசு தரப்பில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை நீதிபதிகள் ஜி.ஜெயசந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் அமர்வு டிசம்பர், 4ல் தள்ளுபடி செய்தது. இதனால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை டிச., 4ல் விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், ''கார்த்திகை தீபத்தை தீபத்தூணில் ஏற்ற வேண்டும். போலீசார் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதை நிறைவேற்றியது குறித்து அரசு தரப்பில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்'' என்றார்.

இந்த அவமதிப்பு வழக்கை கடந்த 9 ம் தேதி மீண்டும் விசாரித்த நீதிபதி சுவாமிநாதன் 'தலைமை செயலர், சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி., ஆகியோர் ஆஜராகும்படி உத்தரவிட்டு இருந்தார்.

இதன்படி தலைமைச் செயலாளர் முருகானந்தம், ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் ஆகியோர் வீடியோ கான்பரன்சிங் முறையில் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் முன் ஆஜராகினர். மதுரை போலீஸ் துணை கமிஷனர் இனிகோ திவ்யன் நேரில் ஆஜரானார். அறிக்கை தாக்கல் செய்ய தலைமைச்செயலர் அவகாசம் கோரினார். தொடர்ந்து வழக்கை அடுத்தாண்டு ஜனவரி 9ம் தேதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.



■ செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில், திருமண உதவித்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு திருமண நிதி உதவியுடன், திருமாங்கல்யத்திற்கு தங்கத்தினையும வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மனிஷ் நாரண வரே, திருப்பூர் மேயர் தினேஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம் , திருப்பூர் மாநகராட்சி 4 ஆம் மண்டல தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட சமூக நல அலுவலர் நா.ரஞ்சிதா தேவி ஆகியோர் உள்ளனர்



## ஜெர்மனியில் கார் ஷோரூமை பார்வையிட்டார் ராகுல்

பெர்லின், டிச.18-

ஜெர்மனிக்கு சென்றுள்ள லோக்சபா எதிர்க்கட்சி தலைவர் ராகுல், அங்குள்ள கார் ஷோரூமை பார்வையிட்டார்.

பார்லி குளிர்கால கூட்டத்தொடர் டிசம்பர் 19ம் தேதி வரை நடக்கிறது. கூட்டத்தொடர் இன்னமும் நிறைவு பெறாத சூழலில், லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுல், ஜெர்மனிக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு காங்கிரசின் அயலக அணி தலைவர்களை சந்திக்க உள்ளார்.

பார்லி கூட்டத் தொடரை புறக்கணித்து விட்டு, ராகுல் ஜெர்மனிக்கு சென்றிருப்பதை பாஜ கடுமையாக விமர்சித்து வருகிறது.

இந்த நிலையில், பெர்லினில் உள்ள கார் ஷோரூமை பார்வையிட்டார். இது தொடர்பான போட்டோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

கடந்த 6 மாதங்களில் மட்டும் ராகுலின் 4வது வெளிநாட்டு பயணம் இதுவாகும். முன்னதாக பிரிட்டன், மலேசியா, பிரேசில் கொலம்பியாவுக்கு சென்றிருந்தார்.

## 'ஜெயலலிதா இதற்கு ஒப்புக்கொண்டு இருப்பாரா ஊரக வேலை விவகாரத்தில் ஸ்டாலின் கேள்வி



சென்னை, டிச.18-

"ஊரக வேலை திட்டத்துக்கான நிபந்தனைகள் எல்லாம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில், நிதிக்கு மட்டும் மாநில அரசு பங்களிக்க வேண்டும் என்பதை அதிமுக எந்த எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொள்கிறதா? உங்கள் தலைவி ஜெயலலிதா இதற்கு ஒப்புக்கொண்டிருப்பாரா?" என முதல்வர் ஸ்டாலின் எடப்பாடி பழனிசாமிக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "பச்சைத்துண்டு போட்டுக்கொண்டு பச்சைத் துரோகம் செய்பவருக்கு, மீண்டும் விவசாயிகள் கண்ணில் தெரியவில்லையா? கிராமப்புற ஏழை மக்களின் வயிற்றிலேயே அடிக்கும் விபிஜி ஆர்ஏஎம் T (VBGRAMG) குறித்து எதிர்க்கட்சி அதிமுகவின் நிலைப்பாடு என்ன? மூன்று வேளாண் சட்டங்கள், குடியுரிமை திருத்தச் சட்டம் போல இதிலும் அமித் ஷாவுக்கு ஆமாம் சாமி போட்டு ஆதரவு தரப்போகிறாரா திருவாளர் பழனிசாமி?

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதம் (MGNREGA) திட்டத்தில் உள்ள காந்தியடிகளின் பெயரை அகற்றிவிட்டு, சொன்னால் வாய் சுளுக்கிக் கொள்ளும்படி இந்தியில் பெயரிட்டிருக்கிறார்கள். இந்தித் திணிப்பை எதிர்த்து வென்ற பேரறிஞர் அண்ணாவின் பெயரைக் கட்சியின் பெயரில் வைத்துக்கொண்டு, இதை எதிர்க்கக் கூடவா தயக்கம்?

திட்டத்துக்கான நிபந்தனைகள் எல்லாம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் நிதிக்கு மட்டும் மாநில அரசு பங்களிக்க வேண்டும் என்பதை அதிமுக எந்த எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொள்கிறதா? உங்கள் தலைவி ஜெயலலிதா இதற்கு ஒப்புக்கொண்டிருப்பாரா?

வறுமையை ஒழித்த சாதனைக்குத் தண்டனையாக தமிழ்நாட்டில் நூறு நாள் வேலைத்திட்டமே நின்றுபோகும் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளோம். இதற்கு, எப்படி முட்டு கொடுக்கப் போகிறார் எதிர்க்கட்சித் தலைவர்? இவ்வளவு குனிந்து கும்பிடும் போடும் உங்களது கட்சிக்கு, "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பெயர் எதற்கு? நான் கேட்கவில்லை; தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வரி விதிப்பு ஆயுதமாக பயன்படுத்தப்படுகிறது: நிர்மலா சீதாராமன் குற்றச்சாட்டு



புதுடில்லி, டிச.18-

சர்வதேச வர்த்தகத்தில் வரிவிதிப்பு என்பது ஆயுதமாக பயன்படுத்தப்படுகிறது என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் குற்றம் சாட்டியுள்ளார்.

2025ம் ஆண்டு இந்திய பொருளாதார மாநாட்டில் நிர்மலா சீதாராமன் பேசியதாவது: வர்த்தகம் சுதந்திரமாகவோ அல்லது நியாயமாகவோ இல்லை. இந்தியா பெரும்பாலும் உள்நோக்கத்துடன் இருப்பதாக விமர்சிக்கப்பட்டாலும், அது உள்நாட்டு தொழில்களைப் பாதுகாக்க மட்டுமே வரிகளைப் பயன்படுத்தியுள்ளது. வரிவிதிப்பை ஒருபோதும் ஆயுதமாக பயன்படுத்தியது கிடையாது. சர்வதேச வர்த்தகத்தில் வரிவிதிப்பு என்பது ஆயுதமாக பயன்படுத்தப்படுகிறது.

இந்தியா கவனமாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். ஒட்டுமொத்தமாக நமது பொருளாதார வலிமையே நமக்கு கூடுதல் நன்மையைத் தரும் என்று நான் நினைக்கிறேன். இந்தியா உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாத்தது. சில நாடுகள் வரிகள் நல்லதல்ல. யாரும் இந்த நடவடிக்கைகளை எடுக்கக்கூடாது என்று கூறுகின்றன. ஆனால் திடீரென்று புதியவர்கள் வந்து நாங்கள் வரி விதிப்போம் என்று கூறுகின்றனர். இவ்வாறு நிர்மலா சீதாராமன் பேசினார்.

அமெரிக்கா விதித்த அதிக வரிகளால் உலகளாவிய வர்த்தகம் சீர்குலைந்து வருவதால், வரிவிதிப்பு ஆயுதமாக பயன்படுத்தப்படுகிறது என நிர்மலா சீதாராமன் குற்றச்சாட்டு கூறி இருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. மெக்சிகோவும் சமீபத்தில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் இல்லாத நாடுகளுக்கு அதிக வரிகளை விதிக்கப்போவதாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது.



■ தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முள்ளிகுளம், வெள்ளகவுண்டன் பட்டி, அரியூர், தலைவன்கோட்டை ஆகிய ஊராட்சி பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமானத்திட்டத்தின் கீழ் வீடு கட்டப்பட்டு வரும் பணிகளை செய்தியாளர்களுடன் சென்று பார்வையிட்டார்.



## உத்தமபாளையம் நீதிமன்றம் முன்பு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வழக்கறிஞர்கள் வாயில் கருப்பு துணியினை கட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்

தேனி டிச.18-

தேனி மாவட்டம் உத்தமபாளையம் நீதிமன்றம் முன்பு தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் வழக்கறிஞர்கள் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு கட்டப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி தேனி மாவட்டம் உத்தமபாளையம் நீதிமன்றம் முன்பு உத்தமபாளையம் ஜாக்டோ வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் வழக்கறிஞர்கள் தங்களது வாயில் கருப்பு துணிகளைக் கட்டி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நீதிமன்றங்களில் ஈ பில்லிங் முறையை ரத்து செய்ய வேண்டும், வழக்கறிஞர்கள் சோமநல நிதியினை 10 லட்சத்திலிருந்து 25 லட்சமாக உயர்த்த கோரியும், வழக்கறிஞர் பாதுகாப்புச் சட்டத்தினை தமிழ்நாட்டில் அமல்படுத்த கோரியும் உத்தமபாளையத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கருப்பு துணி பட்டைகளை வாயில் கட்டி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்தில் உத்தமபாளையம் ஜாக்டோ வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் மேல் காணும் கோரிக்கை வலியுருத்தி இந்த போராட்டம் நடைபெற்றது.

உத்தமபாளையம் ஜாக்டோவழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் வழக்கறிஞர் உமாபாரதி, பார்த்திபன் தலைமையில் நடைபெற்று வருகிறது. இந்த போராட்டத்தில் உத்தமபாளையம் ஜாக்டோ வழக்கறிஞர் சங்கத்தைச் சார்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## விவசாய பாசன வசதிக்காக 18 ஆம் கால்வாயில் உள்ள நீட்டிப்பு கால்வாய் தண்ணீர் திறப்பு விவசாயிகள் மகிழ்ச்சி



தேனி டிச.18-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் தாலுகா பகுதியில் விவசாய பாசன வசதிக்காக பதினெட்டாம் கால்வாயில் உள்ள நீட்டிப்பு கால்வாயில் உத்தமபாளையம் கோட்டாச்சியர் செய்யது முகமது இன்று தண்ணீரை திறந்துவைத்தார்.

விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளன.

மானாவாரி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி இன்று தேனி மாவட்டம் தேவாரம் அருகே உள்ள பதினெட்டாம் நீட்டிப்பு கால்வாயில் உள்ள சுத்த கங்கை ஓடையின் மதகு பகுதியிருந்து உத்தமபாளையம் வட்டத்தில் தேவாரம் பொட்டிபுரம் மற்றும்

போடியநாயக்கனூர் வட்டத்தில் ராசிங்காபுரம், சிலமலை, மேலசொக்கநாதபுரம் ,போடிநாயக்கனூர் ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 4794.70 ஏக்கர் நிலங்கள் மறைமுக பாசன வசதி பெறுவதற்காக உத்தமபாளைம் வருவாய் கோட்டாட்சியர் செய்யது முகமது தலைமையில் மற்றும் போடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் முன்னிலையில் இன்று முதல் 15 நாட்களுக்கு வினாடிக்கு 95 கன அடி வீதம் 121 மில்லியன் கன அடி தண்ணீரை திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மஞ்சளாறு வடிநிலக்கோட்டைசெயற் பொறியாளர் சரவணன் உதவி செயற்பொறியாளர் சாலமன் கிறிஸ்து தாஸ்,

பாசன பிரிவு உதவி பொறியாளர் ஷாம் சுந்தர் விவசாய சங்க பிரதிநிதிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு விவசாய நிலங்களின் பாசனத்திற்காக கூடுதலாக தண்ணீர் திறந்து வைத்த தமிழக முதல்வர் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு அப்பகுதி விவசாயிகள் நன்றியினை தெரிவித்தனர்

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000